தின கனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள்

தொடர்புக்கு:

94436 99066



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது


# தின கனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 217 | 4 Pages | 5.3.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 217 | 4 பக்கங்கள் | 5.3.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்**

**கொன்றாகும் ஆக்கங் கடை**

**விளக்கம்:**

**கொலையால் நன்மையாக விளையும் ஆக்கம் பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவானதாகும்.**

## சீனாவில் 1 கிலோ தங்கக் கடாயில் சமையல் – வைரல் வீடியோ



சீனா, மார்ச். 5

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள ஷென்சென் ஷுய்பெய் நகரில், ஒரு இளம்பெண் 1 கிலோ தங்கக் கடாயில் சமையல் செய்த வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. தங்க நகை விற்பனை மையம் ஷென்சென் ஷுய்பெய் நகரம், சீனாவின் 3வது பெரிய நகரமாக விளங்குவதுடன், மிகப்பெரிய தங்க விற்பனை மையமாக செயல்படுகிறது. அங்கு சுமார் 20,000க்கும் மேற்பட்ட சிறிய தங்க நகை விற்பனை சந்தைகள் இயங்குகின்றன. சீனாவில் விற்பனையாகும் தங்க நகைகளில் 50% ஷுய்பெய் நகரில் உற்பத்தி செய்யப்பட்டவை. தங்கக்கடாயில் சமையல் – வைரலான வீடியோ இந்த நகரில் ஷுய்பே புபு என்ற இளம்பெண் நகைக் கடை உரிமையாளர். தனது கடையில் தங்க ஆபரணங்களுடன், தங்கத்தால்ஆனசமையல்பாத்திரங்களும்விற்பனைசெய்கிறார்.அண்மையில், ஒரு வாடிக்கையாளருக்காக தயாரிக்கப்பட்ட 1 கிலோ தங்கக் கடாயில் சமைத்து, சாப்பிட்ட வீடியோவை அவர் வெளியிட்டார். இதுகுறித்து ஷுய்பே புபு கூறியதாவது: "ஒரு வாடிக்கையாளருக்காக 1 கிலோ தங்கத்தில் கடாய் தயாரித்தோம். இதன் மதிப்பு 1 லட்சம் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ₹87 லட்சம்). இரும்பு, அலுமினியம் கடாயைவிட தங்கக் கடாயில் வேகமாக சமையல் செய்ய முடியும். வாடிக்கையாளரின் அனுமதி பெற்று, நானே சமையல் செய்து பார்த்தேன். சுவையில் எந்த வித்தியாசமும் இல்லை. இப்போதுபலரும்இவ்வகைதங்கக்கடாயைமுன்பதிவுசெய்துவருகின்றனர்."

சர்வதேச வர்த்தக நிபுணர்கள் கருத்து

சர்வதேச வர்த்தக நிபுணர்கள் இதுகுறித்து கருத்து தெரிவிக்கையில், ஷென்சென் ஷுய்பெய் நகரம் சீனாவின் தங்க நகை உற்பத்தியின் தலைநகராக விளங்குவதாக தெரிவித்தனர். கடந்த சில ஆண்டுகளாக இந்த நகரை உலகளவில் பிரபலப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நூதன விளம்பர உத்திகளின் ஒரு பகுதியாக, தங்கக் கடாயில் சமையல் செய்த வீடியோவும் முக்கியமானது. இந்த வீடியோ உலகம் முழுவதும் வைரலாகி, ஷென்சென் ஷுய்பெய் நகரத்தின் தனித்துவத்தையும், அங்கு நடைபெறும் தங்க வியாபாரத்தின் மகத்துவத்தையும் உலகுக்கு எடுத்துக்காட்டுகிறது.

## ரத்ததானம் செய்து 24 லட்சம் குழந்தைகளின் உயிரை காப்பாற்றிய ஜேம்ஸ் ஹாரிசன் காலமானார்



சிட்னி, மார்ச். 5

ரத்த தானத்தின் மூலம் சுமார் 24 லட்சம் குழந்தைகளின் உயிரை காப்பாற்றிய 'தங்கக் கை மனிதர்' (Man with the golden arm) என அறியப்பட்ட ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஜேம்ஸ் ஹாரிசன் (88) காலமானார்.

தனது 18 வயதில் இருந்து 81 வயது வரை 1,173 முறை இவர் ரத்த தானம் செய்துள்ளார். ஜேம்சின் பிளாஸ்மாவில் AntiD எனப்படும் அரியவகை ஆன்டிபாடி இருந்துள்ளது. இது பிரசவத்தின்போது தாயிடம் இருந்து குழந்தைகளுக்கு பரவும் தீங்கு விளைவிக்கும் ஆன்டிபாடிகளை தடுக்க உதவி உள்ளது.

ஜேம்ஸ் ஹாரிசனுக்கு 14 வயதில், நடத்தப்பட்ட ஆபரேஷனின்போது, அவருக்கு ஒரு நுரையீரல் அகற்றப்பட்டிருந்தது. இந்த ஆபரேஷனுக்காக, ஹாரிசனின் உடலில், முகம் தெரியாத பலர் அளித்த 13 யூனிட்கள் ரத்த தானம் மூலம் உயிர் பிழைத்தார். தான் உயிர் பிழைத்ததற்கு நன்றி கடனாக அப்போதே, ரத்த தானம் செய்வதில் விருப்பம் கொண்டிருந்தார்.

இந்த சூழலில் ஆஸ்திரேலியாவில், ரீசஸ் நோயினால் பச்சிளம் குழந்தைகள் அதிகம் மரணமடைந்து வந்தனர். இந்த நோய்க்கு தீர்வு ஏற்பட AntiD என்ற ஆன்டிபாடி அவசியமானதாக கூறப்பட்டது. இதனிடையே, ஹாரிசனின் ரத்த பிளாஸ்மாவில், இந்த AntiD ஆன்டிபாடி இருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து தனது 18 வயதில் இருந்து ரத்த தானம் செய்ய துவங்கி 60 ஆண்டுகளுக்கும் மேலாக, ரத்த தானம் செய்து ஜேம்ஸ் ஹாரிசன் சாதனை படைத்துள்ளார்,

இவரது இந்த செயற்கரிய செயலின் மூலம், சுமார் 24 லட்சம் பச்சிளம் குழந்தைகளின் உயிரை அவர் காப்பாற்றி உள்ளதாக அறிவிக்கப்பட்டது. தனது 81 வயது வரை ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் ஒருமுறை ஜேம்ஸ் ஹாரிசன் இதனை செய்து வந்துள்ளார் கடந்த சில ஆண்டுகளாக ரத்த தானம் அளிப்பதை ஜேம்ஸ் ஹாரிசன் நிறுத்தினார். உடல் நலக்குறைவால் நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தில் குடும்பத்துடன் வசித்து வந்த நிலையில் கடந்த பிப். 17ம் தேதியன்று தனது தூக்கத்திலேயே இயற்கைஎய்தியதாகஅவரதுகுடும்பத்தினர்அறிக்கைவெளியிட்டுள்ளனர்.

AntiDதடுப்பூசிகள்கருவில்உள்ளமற்றும்புதிதாகப்பிறந்தகுழந்தைகளுக்கு வரும் ஹீமோலிடிக் நோய் அல்லது HDFN எனப்படும் ஆபத்தான ரத்தக் கோளாறிலிருந்து பாதுகாக்கின்றன. இந்த நோய் கர்ப்ப காலத்தின் போது வருகிறது. தாயின் ரத்த சிவப்பணுக்கள் கருவில் வளரும் குழந்தையின் ரத்த சிவப்பணுக்களுடன் பொருந்தாத போது இந்த நோய் பாதிப்பு ஏற்படுகின்றது. தாயின் நோய் எதிர்ப்பு அமைப்பு குழந்தையின் ரத்த அணுக்களை அச்சுறுத்தலாகக் கருதி அவற்றைத் தாக்க ஆன்டிபாடிகளை உருவாக்குகிறது. இது கருவில் உள்ள குழந்தைக்கு கடுமையான தீங்கு விளைவிக்கக் கூடும். இதனால் குழந்தைக்கு கடுமையான ரத்த சோகை, இதய செயலிழப்பு அல்லது மரணம் கூட ஏற்படலாம். 1960களில் antiD தடுப்பூசிகள்உருவாக்கப்படுவதற்குமுன்பு,HDFNநோயால்பாதிக்கப்பட்ட இரண்டு குழந்தைகளில் ஒன்று உயிரிழந்தது.

ஜேம்ஸ் ஹாரிசனின் ரத்தத்தில் antiD ஆன்டிபாடி எவ்வாறு இவ்வளவு அதிகமாக இருந்தது என்பது குறித்து தெளிவாக தெரியவில்லை. 14 வயதில் அவருக்கு அதிக அளவில் ரத்த மாற்றம் செய்யப்பட்டதால் இதுபோல நடந்திருக்கக் கூடும் என்று சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# கடலில் ஆழ்துளை எரிவாயு கிணறு அமைக்கும் பணியைக் கைவிட வேண்டும்: பிரதமருக்கு தமிழக முதல்வர் கடிதம்

சென்னை, மார்ச். 5

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு இன்று கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டின் கடற்கரையோரத்தில் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் ஒன்றிய அரசு மேற்கொண்டிருக்கும் கடல்சார் ஆழ்துளை எரிவாயுக் கிணறுகள் அமைக்கும் நடவடிக்கை குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறேன்.

ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் ஹைட்ரோகார்பன் இயக்குநரகம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு தொகுதிகளை ஏலம் விடுவதற்கான திறந்தவெளி பரப்புரிமை கொள்கை (Open Acreage Licensing PolicyBid RoundX) அறிவிப்பினை 11.02.2025 அன்று தொடங்கியிருக்கிறது. அந்த அறிவிப்பில் காவிரிப்படுகையில்CYDWHP2024/1 என்ற தொகுதி பெயரில் 9990.96 சதுர கி.மீ. பரப்பளவும் அடங்கும். இது மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்திற்குள்ளும், பாக் விரிகுடா மற்றும் வாட்ஜ் கரைக்கு அருகில் உள்ளது.

மன்னார் வளைகுடா கடல் தேசியப் பூங்காவை உள்ளடக்கிய மன்னார் வளைகுடா கடற்பகுதி, உயிர்க்கோளக் காப்பகமாக ஒன்றிய அரசால் 18.02.1989 அன்று அறிவிக்கப்பட்டது. இது பவளப்பாறைகள், கடல் புல் படுகைகள், சதுப்பு நிலங்கள், கழிமுகங்கள், சேற்றுப் படுகைகள், தீவுகள் மற்றும் காடுகள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளை உள்ளடக்கிய வளமான பல்லுயிர் பெருக்கத்தைக் கொண்டுள்ளது.

இந்த உயிர்க்கோளக் காப்பகம், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கடற்கரையிலிருந்து 560 சதுர கி.மீ பரப்பளவில், பரந்து விரிந்து கிடக்கும் 21 தீவுகள் மற்றும் அருகிலுள்ள பவளப்பாறைகளின் சங்கிலியைக் கொண்டுள்ளது. இது பல்வேறு வகையான கடல் விலங்கினங்களின் புகலிடமாக விளங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு செப்டம்பர் 2021ல் பாக் விரிகுடாவில் மிக அரிதான கடற்பசு (Dugong) இனத்தைப் பாதுகாக்கும் வகையில், இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகத்தை அறிவித்துள்ளது. இது தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதியில் 448 சதுர கி.மீ. பரப்பளவை உள்ளடக்கியது.

இந்தப் பகுதியில் பெட்ரோலியம்



மற்றும் இயற்கை எரிவாயுவிற்கான ஆழ்துளை எரிவாயுக் கிணறுகள்,

இந்தப் பகுதிகளில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய சுற்றுச்சூழல் அமைப்பு, அவற்றின் வளமான பல்லுயிர் பெருக்கம் மற்றும் கடல் வாழ் உயிரினங்களுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தக்கூடும் மற்றும் கடலின் ஒட்டுமொத்த பாதுகாப்பினையும் சீர்குலைக்கக்கூடும்.

வண்டல் படிவுகள், நச்சுக் கழிவுகள் வெளியேற்றம் மற்றும் கடல் வாழ் உயிரினங்களின் அழிவு போன்ற அபாயங்கள் மட்டுமின்றி, மன்னார் வளைகுடாவை தங்கள் வாழ்வாதாரத்திற்காக நம்பியுள்ள லட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும்.

ஒன்றிய அரசின் ஆழ்துளை எரிவாயுக் கிணறுகள் அமைக்கும் நடவடிக்கைகளால் ஏற்படும் இதுபோன்ற எந்தவொரு இடையூறும், முழு கடலோரப் பகுதியையும் பாதிக்கப்படையச் செய்யும். இது கடலோர சமூகங்களிடையே பெருத்த அச்சத்தை உருவாக்கியுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, இந்த ஏல அறிவிப்புக்கு முன்பாக ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசிடம் கருத்து எதையும் கேட்கவில்லை. உரிய ஆலோசனை கேட்கப்பட்டிருந்தால், மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துப் பிரச்சனைகள் குறித்தும் தமிழ்நாடு அரசின் சார்பில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கும்.

எனவே, இந்தச் சூழ்நிலையில், ஒன்றிய அரசின் இந்த ஆழ்துளை எரிவாயுக் கிணறுகள் அமைப்பதற்கான ஏல முடிவினை மறுபரிசீலனை செய்யுமாறும், ஆழ்துளை எரிவாயுக் கிணறுகள் அமைப்பதற்காக அறிவிக்கப்பட்ட அனைத்து பல்லுயிர் நிறைந்த பகுதிகளையும் OALPஇலிருந்து நீக்குமாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

எளிதில் பாதிக்கப்படக்கூடிய, பாதுகாக்கப்பட்ட இந்தச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் எதிர்காலம் ஆபத்தில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த முக்கியமான பிரச்சனையில் பிரதமர் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## J.M.J media வினால் நடாத்தப்பட்ட அறிவியல் தின சிறப்பு நிகழ்வு

J.M.J media வினால் சிறப்பு நாட்களில் ஒவ்வொரு நிகழ்வுகள் J.M.J media வின் அனுசரணையுடன் J.M.J media நிறுவனப் பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடந்து வருகின்றது. இந்த வகையில் இம் முறை தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு J.M.J.media வின் அனுசரணையுடன் அறிவியல் மனப்பான்மை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த சோதனைகள், பரிசோதனைகளை மாணவர்கள் செய்து அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் சிறப்பான நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டது.



இந்த நிகழ்வானது J.M.J media வின் இந்திய நிர்வாகக் குழு உறுப்பினர் தலைமை ஆசிரியர் திரு சீ.சிவஞானம் MA.Bed அவர்களின் தலைமையின் கீழ் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வள்ளிப்பட்டு ஆலங்காயம் ஒன்றியம்வாணியம்பாடிதிருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு. இந்தியா பள்ளியில் சிறப்பான முறையில் நிகழ்வு நடந்து முடிந்தது. இதில் மாணவர்களும் ,உதவி ஆசிரியர்களும் பங்கு கொண்டனர். நாளைய அப்துல்கலாம்களாக மாணவர்கள் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் இன் நிகழ்வு சிறப்புற இனிதே நடந்தேறியது .

## ஏழு வயதில் 12 நாட்களில் 707 கிலோ மீட்டர் தூரத்தினை ஓடி கடந்து உலக சாதனை




சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அமைந்துள்ள தனியார் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களான பிரதீஷ் மற்றும் பிரணீஷ் இவர்கள் கரைக்குடியில் .வசிக்கும் ராஜேஷ் மற்றும் ராமாமிர்தம் தம்பதியரின் மகன்கள் ஆவர்.இரட்டை சகோதரர்களான இவர்களின் ஆர்வத்தை கண்டறிந்து மூன்று வயது முதலே ஓட்டப்பந்தயத்திற்கான சிறு சிறு பயிற்சிகள் கொடுத்து வந்துள்ளார்கள்.,

இந் நிலையில் உலக சாதனை படைப்பதற்காக கடந்த பிப்ரவரி மாதம்16ஆம் தேதி கன்னியாகுமரியில் அமைந்துள்ள காந்தி மண்டபத்தில் உலக சாதனை படைக்கும் முயற்சி தொடங்கப்பட்டது.நாள் ஒன்றுக்கு 60 கிலோ மீட்டர் என்ற ரீதியில் 12 நாட்களில் ஓடிய சிறுவர்கள் பிப்ரவரி 27ஆம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்தை அடைந்தனர்.

சோழன் உலக சாதனையை புத்தகத்தில் இடம் பிடித்து காரைக்குடிதிரும்பியஇருமாணவர்களுக்கும்அவர்கள்பயின்ற காரைக்குடி செட்டிநாடு பள்ளி தாளாளர் குமரேசன் அவர்கள் பாராட்டி அவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் காசோலையும் பாராட்டு சான்றிதழ் வழங்கியும் கௌரவித்தார்.அதன் பின்பு இருமாணவர்களுக்கும்சோழன்உலகசாதனைபடைத்ததற்கான சான்றிதழை அவ்நிறுவனத்தினர் வழங்கி கௌரவித்தனர்.ஏழு வயதிலே 12 நாட்களில் 707கிலோ மீட்டர் தூரம் தொடர்ந்து ஓடி சாதனை படைத்த இரட்டை சகோதரர்களுக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து பாராட்டு குவிந்த வண்ணம் உள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.



ஊடக கனி நல சங்கத்தின் திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து நம்முடைய ஊடக உறவாகிய மனித விழிப்புணர்வு பத்திரிக்கையின் நிருபர் ஜெயபாண்டியனுக்கு திருமணத்திற்கு சென்று வாழ்த்து கூறி இன்று போல் என்றும் வாழ் வேண்டியும் இல்லறம் நல்லறமாக இருக்கவும் ஊடக கனி நல சங்கத்தின் மாநில தலைவர் கனிராஜ் சார்பாகவும் வாழ்த்துகிறோம்.



திருநெல்வேலியில் இருந்து கொடைக்கானல் நோக்கி வந்த கார் மேல்பள்ளம் அருகே டிரைவர் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள பள்ளத்தில் கவிழ்ந்து மரத்தில் மோதி 3 ஆண்கள், 2 பெண்கள், 2 காயங்களின்றி குழந்தைகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்

# சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை - விலையில்லா சீருடை வழங்கல் விழா

சிவகங்கை, மார்ச். 5

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில், தமிழக அரசின் விலையில்லா சீருடைவழங்கும்நிகழ்ச்சி பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.




இந்த நிகழ்வில் பெற்றோர்ஆசிரியர் கழக உறுப்பினர்கள்ரங்கீலா, அமலா, அமுதா, ரீட்டா, இந்திரா, ஜெயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு அனைத்து மாணவர்களுக்கும் சீருடைகளை வழங்கினர். மாணவர்கள் புதிய சீருடைகளை பெற்றதில் மகிழ்ச்சி அடைந்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர் மற்றும் முத்துலெட்சுமி செய்து இருந்தனர்.

# சாதிவாரி கணக்கெடுப்பு: நாம் தமிழர் கட்சி சார்பில் வருகிற 16ந்தேதி பேரணி

சென்னை, மார்ச்.5

அண்டை மாநிலமான தெலங்கானா சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தி முடித்தது மட்டுமின்றி, அதனடிப்படையில் அம்மாநிலத்தின் இடஒதுக்கீட்டின்அளவை இப்போதுள்ள 50 விழுக்காட்டில்இருந்து 66 விழுக்காடாக உயர்த்த முடிவு செய்து அதற்கான சட்டத் திருத்த முன்வரைவை அடுத்த மாதம் முதல் வாரத்தில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்து நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறது. அதேநேரம், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று தமிழ்நாடு அரசு கூறி வருகிறது.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த பா.ம.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.



இந்நிலையில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துமாறு தமிழக அரசை வலியுறுத்தி 16ந்தேதி செங்கல்பட்டில் பேரணி நடைபெறும் என்று நாம் தமிழர் கட்சி அறிவித்துள்ளது.

கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் செங்கல்பட்டில் பிற்பகல் 4 மணிக்கு பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காரைக்குடி மாரத்தான் 2025 - சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு மற்றும் வெற்றி பெற்றனர்

காரைக்குடி, மார்ச்.5

விசாலன்கோட்டையில் உள்ள கலாம் கவி கிராமத்தில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், தீ பெடரல் ஆங்கில இணையதளம் மற்றும் செட்டிநாடு பப்ளிக் ஸ்கூல் இணைந்து நடத்திய காரைக்குடி மாரத்தான் 2025 வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வு அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக அமைந்திருந்தது. இந்த மாரத்தான் போட்டியில் சுமார் 1500 மாணவ மாணவிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். அவர்களில் சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்று தங்களது திறமை மற்றும் ஆற்றலை வெளிப்படுத்தி, பரிசுகளை வென்று பெருமை சேர்த்தனர். மாரத்தானில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.



இவ்வகையான போட்டிகள் மாணவர்களின் உடல் உறுதியை மேம்படுத்துவதோடு, அவர்களுக்கு ஒற்றுமை, பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை வளர்க்க உதவுகின்றன.

இந்த வெற்றியை அடைந்த மாணவர்களுக்குகல்லூரிநிர்வாகம், பேராசிரியர்கள், நண்பர்கள் மற்றும் சக மாணவர்கள் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர். மேலும், எதிர்காலத்திலும் இத்தகைய போட்டிகளில் பங்கேற்று சாதனைகள் புரிய அனைவருக்கும் உற்சாகம் வழங்கப்பட்டுள்ளது.

# கரும்புக்கான கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ.3,151 நிர்ணயம் தமிழ்நாடு அரசு

கோவை, மார்ச். 5

கோவை ஈஷா யோக மையத்தில் தமிழ் பண்பாட்டை கொண்டாடும் வகையில் பிப். 27 முதல் மார்ச் 9 வரைநடைபெறும் "தமிழ்த் தெம்பு தமிழ் மண் திருவிழா" எனும் பிரம்மாண்ட விழா நடைபெற்று வருகிறது.

இது தொடர்பான பத்திரிக்கையாளர் சந்திப்பு கோவை பிரஸ் கிளப்பில் இன்று நடைபெற்றது. இதில் முன்னோடி இயற்கை விவசாயியும் தமிழ்த் தெம்பு விழா குழுவின் தன்னார்வலருமான வள்ளுவன் பங்கேற்று பேசினார்.



பத்திரிக்கையாளர் சந்திப்பில் வள்ளுவன் பேசுகையில், "சத்குருவின் வழிகாட்டுதலின் படி தமிழ் மொழியின் செழுமையையும், தமிழ் மண்ணின் கலாச்சாரம், வீரம், கலைகள், வரலாறு, உணவு முறைகள், வாழ்வியல் உள்ளிட்ட தமிழர் பண்பாட்டின் தொன்மையையும் கொண்டாடும் விதமாக 'தமிழ்த் தெம்பு தமிழ் மண் திருவிழா' கடந்த 2023ஆம் ஆண்டு முதல் கோவை ஈஷா யோக மையத்தில் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இந்தாண்டு 'தமிழ்த் தெம்பு திருவிழா' மிகவும் பிரம்மாண்டமான முறையில் கடந்த பிப்ரவரி 27ஆம் தேதிதுவங்கிநடைபெற்று வருகிறது. இத்திருவிழா வரும் மார்ச் 9ஆம் தேதி வரை 11 நாட்கள் ஆதியோகி முன்பு நடைபெறுகிறது.

இத்திருவிழாவில் 150க்கும் மேற்பட்ட கைவினை, கைத்தறி, உணவு, விவசாய மற்றும் விளையாட்டு பொருட்களின் அரங்குகள் இடம் பெற்றுள்ளன.

நாட்டின மாடுகள், குதிரைகள் மற்றும் பிற கால்நடைகளின் கண்காட்சியும் இத்திருவிழாவில் நடைபெற்று வருகிறது. இதனுடன் மிகவும் பிரம்மாண்டமான முறையில் ஆதியோகி முன்பு மார்ச் 7 முதல் 9 ஆம் தேதி வரை 'நாட்டு மாடுகள் மற்றும் குதிரைகளின் சந்தையும்' நடைபெற உள்ளது.

நம் தமிழ் பண்பாட்டில் நிகழ்த்து கலைகள் என்பன எளிய மக்களுடைய உணர்ச்சிகளின் வடிகாலாக, வாழ்வியல் வரலாற்று பதிவுகளாக, உடல் மன ஒத்திசைவின் உச்சமாக வளர்ந்து வந்துள்ளன. இன்றைய காலத்தில் இந்த கலைகள் அனைத்தும் அழியும் அபாயத்தில் உள்ளது, ஆகையால் இந்த கலைகளையும், கலைஞர்களையும் வளர்த்து ஊக்குவிக்கும் விதமாக 11 நாட்களும் மாலை நேரங்களில் தமிழ் பண்பாட்டு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

குறிப்பாக இதில் பறையாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், வள்ளி கும்மி உட்பட பல நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதனுடன் ஈஷா சமஸ்கிருதி மாணவர்கள் வழங்கும் 'நாயன்மார்கள் கதையாடல்' மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது.

நம் தமிழ்நாட்டில் விளையும் பொருட்கள் முதல் தயாரிக்கப்படும் பொருட்கள்வரை பலவும் இந்த மண்ணுக்கே உரிய தனித்தன்மை கொண்டவைகளாகும். அந்த வகையில் தஞ்சாவூர் ஓவியம், வில்லியனூர் டெரகோட்டா, தோடா எம்பிராய்டரி, கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், மகாபலிபுரம் கற்சிலை, சுவாமிமலை ஐம்பொன் சிற்பங்கள் உள்ளிட்ட 20 புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனையும் இத்திருவிழாவில் இடம்பெறுகின்றன.

இந்த கண்காட்சியுடன் கூடுதலாக பார்வையாளர்களுக்கு இந்த கலைகளின் எளிமையான செய்முறை பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட உள்ளது. இந்த பயிற்சி வகுப்புகள் மார்ச் 1ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை நடைபெற்று வருகின்றன.

தமிழர்பண்பாடுகுறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிலம்பப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி,ஓவியப்போட்டி, கோலப்போட்டி, பறையிசைப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இப்போட்டிகள் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் 16 வயதுக்கு உட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக நடைபெற உள்ளன. இதில் பங்கேற்று வெற்றி பெறும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசுகள் வழங்கபட உள்ளன.

தமிழர்கள் போர்க்களங்களில் பயன்படுத்தும் உத்திகள் மட்டுமல்ல ஆடுகளத்தில் ஆடும் விளையாட்டுகளும் வீரம் செறிந்தவை, அந்த வகையில் கொங்குநாட்டு வீர விளையாட்டான 'ரேக்ளா பந்தயம்' மார்ச் 9ஆம் தேதி நடைபெற உள்ளது. இதனுடன் பொது மக்களும், குழந்தைகளும் பங்கேற்று விளையாடி மகிழும் வகையில் கேளிக்கை விளையாட்டுகளும், மெகா இராட்டினங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது" என அவர் கூறினார்.

https://isha.sadhguru.org/mahashivratri/ta/tamilthembu/

# தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்பு

சென்னை, மார்ச்.5

தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் தலைவராக முன்னாள் நீதிபதி ராஜமாணிக்கம் பதவி ஏற்றுக்கொண்டார். உறுப்பினர்களாக ராமராஜ், ஆறுமுக மோகன் அழகுமணி ஆகியோரும் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்புக்கு தலைவராக சென்னை ஐகோர்ட்டு ஓய்வு பெற்ற நீதிபதி பி.ராஜமாணிக்கத்தை நியமித்து கவர்னர் உத்தரட்டார். மேலும் நீதி சாராத 2 உறுப்பினர்களாக, மாவட்ட நுகர்வோர்குறை தீர்ப்பு கமிஷனின் தலைவர் வி.ராமராஜ் (நாமக்கல்) மற்றும் வருமான வரிகள் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முன்னாள் உறுப்பினர் ஆறுமுக மோகன் அலங்காமணி ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். இந்த நிலையில்தான் இன்னு பதவி ஏற்றுக்கொண்டனர்.

லோக் ஆயுக்தா தலைவராக முன்னாள் நீதிபதி ராஜமாணிக்கம் 17.4.2027 வரை பதவி வகிப்பார். மற்ற 2 உறுப்பினர்கள் தங்கள் 70 வயது வரையிலோ அல்லது 5 ஆண்டுகள் வரையிலோ, இதில் எது முதலில் வருகிறதோ? அதுவரையில் பதவியில் நீடிப்பார்கள்.



லோக் ஆயுக்தா தலைவராக பதவி ஏற்றுள்ள ஓய்வு பெற்ற நீதிபதி ராஜமாணிக்கம் 31.5.1959ம் ஆண்டு பிறந்தவர். 1983ம் ஆண்டு வக்கீலாக பணியை தொடங்கி, அதன்பின்னர் மாவட்டநீதிபதி,மாவட்ட தலைமை நீதிபதி என படிப்படியாக பதவி உயர்வு பெற்றார். 2016ம் ஆண்டு சென்னை ஐகோர்ட்டு பதிவாளராக பதவியேற்ற அவர் அடுத்த ஆண்டில்(2017)சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஆனார். 30.5.2021 அன்று நீதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் நீதி பிரிவு உறுப்பினராக 18.4.2022 முதல் 19.8. 2024 வரை பணியாற்றினார்.

# கவிஞர் நந்தலாலா மறைவுக்கு முதல்வர் இரங்கல்

சென்னை, மார்ச்.5

கவிஞரும், பட்டிமன்ற பேச்சாளருமான நந்தலாலா உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். அவரது மறைவுக்கு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.



நந்தலாலா மறைவுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

தமிழ்நாட்டின் புத்தகத் திருவிழாக்கள், முற்போக்கு மேடைகள், தொலைக்காட்சி விவாதங்கள், பட்டிமன்றங்கள் எனக் கவிஞர் நந்தலாலாவின் குரல் ஒலிக்காத மேடையே இல்லை எனும் அளவுக்கு அனைத்து உணர்ச்சிகளையும், அரிய தகவல்களையும்தமது பேச்சில்வெளிப்படுத்தும் திறம் பெற்றவர் அவர்.

காவிரிக்கரையின் மைந்தனான கவிஞர் நந்தலாலா தமது ஊரான திருச்சியின் மீது கொண்ட தீராக்காதலுக்கு, "திருச்சிராப்பள்ளி: ஊறும் வரலாறு" நூலே சான்றாகும்.

அவரது ஆற்றல் தமிழ்ச் சமூகத்துக்கு மேலும் பயனளிக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு, தமிழ்நாடு இயல்இசைநாடகமன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் அவரை நியமித்திருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

தந்தை பெரியார் மீது பெரும் பற்றும், பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பும், தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தவர் கவிஞர் நந்தலாலா. தலைவர் கலைஞர் குறித்து, "தாம் வாழ்ந்த காலம் முழுதும், மானமும் அறிவும்; துணிச்சலும் செயலுமாக வாழ்ந்தவர் கலைஞர். உரிமை மீட்புப் போரில் அவரே நமக்கு என்றும் போர்வாள்" என்று உண்மை இதழில் அவர் எழுதிய சொற்களை மறக்க முடியாது.

என் மீதும் மிகுந்த மரியாதையும் பாசமும் கொண்டிருந்தார்.

எனது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு பரந்த மனத்தோடும் அன்போடும் வாழ்த்திப் பேசியதையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

மேலும் பல்லாண்டுகள் தமிழ்ச் சமூகத்துக்கு அருந்தொண்டாற்றவிருந்த அவர் மறைந்துவிட்டார் என்பது வேதனையளிக்கிறது. அவரைஇழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் தோழர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மு.க. ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கோவை ஜெயிலில் விசாரணை கைதி உயிரிழப்பு

கோவை, மார்ச். 5

திண்டுக்கல் மாவட்டம் தசரா பட்டியை சேர்ந்த கணேசன் (46) என்பவர் உடுமலையில் நடந்த அடிதடி வழக்கில் கைதாகி கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் கோவை மத்திய ஜெயிலில் அடைக்கபட்டு இருந்தார்.

அவர் அடைக்கப்பட்டு இருந்த ஜெயில் அறையில் அவர் மயங்கி கிடந்தார். சிறைகாவலர்கள் இதுகுறித்து கோவை மத்திய சிறை ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.




அவர்கள் உடனடியாக வந்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர்.

தொடர்ந்து அவரை கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இது குறித்து ரேஸ்கோர்ஸ் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஊதா, ஊதா, ஊதாப்பூ... கொடைக்கானலில் வசந்த காலத்தை வரவேற்கும் ஜெகரண்டா மலர்கள்

கொடைக்கானல், மார்ச். 5

மலைகளின் இளவரசியான கொடைக்கானல் சர்வதேச சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. இங்கு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அருவிகள், நீரோடைகள் போன்றவை வருடம் முழுவதும் ரம்யமாக காட்சியளிக்கிறது.

மேலும் பல வண்ணங்களில் பூத்துக்குலுங்கும் மலர்களும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்து இழுக்கும். இதுதவிர ஆண்டு முழுவதும் விதவிதமான பூக்கள் இங்கு பூத்துக்குலுங்குவது வழக்கம்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலர் உள்பட சீசன் காலங்களில் பூத்துக்குலுங்கும் விதவிதமான மலர்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவரும்.



மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களும், கொடைக்கானல் போன்ற மலைவாழ் சுற்றுலா தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளும் மிகவும் விரும்புவது கோடை காலமாகும்.

இந்த கோடை வசந்த காலம் தொடங்குவதன் அறிகுறியாக தற்போது மலைப்பகுதிகளில் ஜெகரண்டா மலர்கள் பூத்துக் குலுங்கத்துவங்கியுள்ளது.

கொடைக்கானலில் இருந்து பழனி மற்றும் வத்தலக்குண்டு செல்லும் சாலைகளான பெருமாள் மலை, வடகவுஞ்சி, ஊத்து உள்ளிட்ட வெப்பம் அதிகமுள்ள கீழ்மலைப்பகுதிகளில் இந்த மரங்களின் இலைகள் முழுவதும் உதிர்ந்து, மரம் முழுவதும் நீல வண்ண மலர்களாக பூத்து குலுங்குகிறது. இது காண்போரை வெகுவாக கவர்ந்துள்ளது.

தற்பொழுது பூக்கத்துவங்கும் இம்மலர்கள் இன்னும் சில மாதங்கள் முழுமையாக பூக்கும் தன்மையை அடைந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கோடை காலத்தில் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இந்த மலர்களை வெகுவாக ரசித்து அதன் அருகில் நின்று புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர்.

# சாதி பாகுபாடுகளுக்கு எதிராக போராடியவர் அய்யா வைகுண்டர் எடப்பாடி பழனிசாமி

சென்னை, மார்ச்.5

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

"தாழக் கிடப்போரைத் தற்காப்பதே தர்மம்" என்னும் கொள்கையைப் பரவலாக்கம் செய்தவர், சாதி பாகுபாடுகளுக்கு எதிராக போராடியவர், அய்யா வைகுண்டர்.

ஒவ்வொரு ஆண்டும், மாசி 20ம் தேதி சுவாமி தோப்பு அய்யா வைகுண்டரின் அவதார தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் அய்யா அவர்களின் 193வது அவதாரதினமான இன்று அவர்தம் திருப்பாதங்களை போற்றி வணங்குகிறேன்.



நாம் ஒவ்வொருவரும் அறம்சார்ந்து வாழ வேண்டும், பொய் பேசக்கூடாது. எளிமையாய் வாழ வேண்டும்எனும்அய்யாவழியை பின்பற்றும் அனைவருக்கும் இந்நன்னாளில் எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக அரசின் விலையில்லா சீருடை வழங்கும் விழா நான்காம் செட் சீருடை பெற்றதில் மாணவர்கள் மகிழ்ச்சி

தேவகோட்டை சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா சீருடை பள்ளிதலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமையில் அனைத்து மாணவர்களுக்கும்



பெற்றோர்ஆசிரியர்கழக உறுப்பினர்கள் ரங்கீலா, அமலா, அமுதா, ரீட்டா, இந்திராஜெயலட்சுமி ஆகியோர் வழங்கினார்கள். சீருடைகளை பெற்றுக்கொண்டதில் மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் சீருடை வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர் மற்றும் முத்துலெட்சுமி செய்து இருந்தனர்.

# அண்ணா சாலையில் ரூ.3 கோடியில் சிறு விளையாட்டு அரங்கம்: துணை முதலமைச்சர் திறந்து வைத்தார்

சென்னை, மார்ச். 5

சென்னை அண்ணா சாலையில் உள்ள காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் 4.068 ஏக்கர் பரப்பளவில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தின் பயிற்சிக் கூட கட்டடம் 396 சதுர மீட்டர் பரப்பளவில் வரவேற்பு பகுதி, ஆண்கள் மற்றும் பெண்களுக்குதனித்தனியே உடைமாற்றும் அறைகள், கழிப்பறைகள், பொருட்கள் வைப்பறை, மேலாளர் அறை உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டு உள்ளது.

மேலும் சிறு விளையாட்டரங்கத்தில் திறந்த வெளி பார்வையாளர் மாடம் 265 நபர்கள் அமரும் வசதியுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும் 2 கிரிக்கெட் டர்ப் அமைக்கப்பட்டுள்ளது.

அதே போல மதுரை, தூத்துக்குடி, சிவகங்கை மாவட்டத்தில் கட்டப்பட்டு உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கமும் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இவற்றை திறந்து வைத்தார். முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்தில் ஒரு ஆண்டுக்கு 9 ஆயிரம் ரூபாயும், 6 மாதத்திற்கு 5 ஆயிரம் ரூபாயும், 3 மாதத்திற்கு 2 ஆயிரத்து 500 ரூபாயும், மாதம் ஆயிரம் ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தை துணை முதலமைச்சர் திறந்து வைத்து கிரிக்கெட் டர்ப்பில் கிரிக்கெட் விளையாடினார். உடன் மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிருபர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் உத்தரவுப்படி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளிலும் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என 2022, 2023ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டது. அதன்படி சென்னைசேப்பாக்கம் திருவல்லிகேணி சட்டமன்றத் தொகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

அதே போல மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களில் 3 கோடி ரூபாயில் கட்டுப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்துள்ளோம். மொத்தமாக இன்று 12 கோடி ரூபாய் மதிப்பில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது. அது இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனது சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியில் இருந்து 50 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 2 கோடியே 50 லட்சம் ரூபாய் அரசு சார்பாக விளையாட்டுத்துறை சார்பாக கொடுக்கப்பட்டு உள்ளது.

அதே போல மதுரை, தூத்துக்குடி மற்றும் சிவகங்கையில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் 50 லட்சம் ரூபாய் கொடுத்து உள்ளார்கள். மீதம் உள்ள தொகையை அரசு சார்பாக வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

சேப்பாக்கம் திருவல்லிகேணி சிறு அரங்கத்தில் உள்ள உடற்பயிற்சி கூடம் ஏசி பொருத்தப்பட்ட உடற்பயிற்சி கூடமாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆக்கி, 2 கிரிக்கெட் டர்ப் பார்வையாளர்கள் மாடம் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தில் உள்ளது என தெரிவித்தார். மற்ற மாவட்டங்களில் உள்ள விளையாட்டு அரங்கத்தில் பல்வேறு விளையாட்டுகள் போட்டிகள் நடைபெறும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் மேலும் 9 மினி அரங்கம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு 22 மினி அரங்கம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான டெண்டர் விடப்பட்டுள்ளது.

அந்த பணிகள் விரைவில் தொடங்க உள்ளது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் குறைந்தது 25 மினி அரங்கம் கட்டுவதற்கான அறிவிப்பை வெளியிட உள்ளோம். அந்த பணிகள் அனைத்தும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் முடிக்க உள்ளோம்.

இந்த விளையாட்டு அரங்கத்தை விளையாட்டு வீரர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தனியார் பள்ளி வேன் கவிழ்ந்து; 16 குழந்தைகள் படுகாயம்

ஆத்தூர், மார்ச். 5

சேலம் மாவட்டம் வாழப்பாடி அடுத்த பழனியாபுரம் பகுதியில் ஒரு தனியார் பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான குழந்தைகள் படித்து வருகிறார்கள். மாணவ, மாணவிகளை தினமும் பள்ளிக்கு சொந்தமான வேன், பஸ் மூலம் அழைத்து வந்து செல்கிறார்கள்.



இன்று காலையும் வழக்கம் போல் பள்ளி வேன் பெத்தநாயக்கன் பாளையம் அருகே உள்ள களரம்பட்டி பகுதிக்கு சென்று பள்ளி குழந்தைகளை ஏற்றிக் கொண்டு வந்தது. அப்போது அந்த வேனில் 16 குழந்தைகள் இருந்தனர்.

வேனை டிரைவர் சிவபெருமாள் என்பவர் ஓட்டி வந்தார். வேன் களரம்பட்டி சாலையில் வந்து கொண்டு இருந்தது.

அப்போது கட்டுப்பாட்டை இழந்த பள்ளி வேன் ரோட்டோரம் இருந்த ஒரு வீட்டின் மீது மோதி தலைகுப்புற கவிழ்ந்து விபத்தானது. இதில் வேனில் இருந்த 16 மாணவ, மாணவிகளும் படுகாயம் அடைந்து அலறினர்.

இதையடுத்து அக்கம், பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து வேனில் சிக்கிய குழந்தைகளை மீட்டனர். பின்னர் அவர்களை அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அனுப்பி வைத்தனர். இதில் பலத்த காயம் அடைந்த 6 குழந்தைகள் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்து பற்றி தெரியவந்ததும் சம்பவ இடத்துக்கு மல்லியகரை போலீசார் மற்றும் குழந்தைகளின் பெற்றோர் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தனர். பின்னர் போலீசார் ஜே.சி.பி. வாகனம் மூலம் விபத்தில் சிக்கிய பள்ளி வேனை மீட்டனர். தொடர்ந்து இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# மக்களிடம் அறநெறிகளை வளர்த்தவர் அய்யா வைகுண்டர் அண்ணாமலை



சென்னை, மார்ச். 5

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஒடுக்கப்படும் மக்களைக்காப்பதும், எளியவர்களுக்கு உதவிகள் செய்வதுமே தர்மம் என்று அன்பு நெறிகளை போதித்து, ஜாதி, மத வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானவராக இருக்கும் அய்யா வைகுண்டர் அவர்களின் 193 ஆவது அவதார தினத்தைக் கொண்டாடும் உலகளாவிய பக்தர்கள் அனைவருக்கும், பா.ஜ.க. சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடவுள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறார் என்ற ஞானத்தைப் போதித்து, சமூக ஏற்றத்தாழ்வுகளை விலக்கி, ஆண் பெண் அனைவரும் சமம் என, சமத்துவத்தையும் சமாதானத்தையும் விதைத்தவர்.

உடல் தூய்மையையும், உள்ளத் தூய்மையையும் வலியுறுத்தி, மக்களிடம் சமத்துவம், சமூகநீதி, சுயமரியாதை, அச்சமின்மை, தர்மம் போன்ற அறநெறிகளை வளர்த்தவர் அய்யா வைகுண்டர் அவர்கள்.

அதிகாரத்துவம், சமூக ஏற்றத்தாழ்வு, கொலை, கொள்ளை, பெண்கள், குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ள இன்றைய காலத்தில், அய்யா வைகுண்டர் அவர்களின் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வது முக்கியமானதாக இருக்கிறது.

அய்யா வைகுண்டர் அவர்களின் அவதார தினமான இன்று, அவரின் கருத்துகளைப் பின்பற்றி, அவர் காண விரும்பிய, ஏற்றத்தாழ்வற்ற, அமைதியான சமுதாயத்தை உருவாக்குவோம் என்று உறுதியேற்போம்.

அய்யா உண்டு!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அரசு ஊழியர்கள் வருகிற தேர்தலில் தி.மு.க.வுக்கு எதிராக வாக்களிப்பார்களா? அமைச்சர் பெரியசாமி விளக்கம்

திண்டுக்கல், மார்ச்.5

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 54 பயனாளிகளுக்கு, ரூ. 54 லட்சத்து 97 ஆயிரம் மதிப்பிலான மாற்றுத் திறனாளிகளுக்கான பிரத்யேக ஸ்கூட்டர்களை அமைச்சர் இ.பெரியசாமி இன்று வழங்கினார். இதில் கலெக்டர் சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திலகவதி, மாற்றுத்திறனாளிகள் மாவட்ட அலுவலர் தங்கவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அதனைத் தொடர்ந்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நகர் ஊரமைப்பு துறை சார்பில் ரூ. 4.75 கோடி மதிப்பில் கட்டப்பட்ட மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தை அமைச்சர் இ.பெரியசாமி திறந்து வைத்தார். பின்னர் விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். வேளாண் துறை, ஊரக வளர்ச்சித்துறை மாற்றுதிறனாளிகள் நலத்துறை உள்பட ஆறு துறைகள் சார்பில் 257 நபர்களுக்கு ரூ. 1 கோடியே 87 லட்சத்து 10 ஆயிரத்து 885 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

அதன் பின் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:

பருவமழை காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு சேம நிதியிலிருந்து முதலமைச்சரால் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த 400 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சக்கர மோட்டார் வாகனம் 100 நபர்களுக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. திருமணத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு தாலிக்கு தங்கம் திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

ரூ. 2 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. 2023ல் ஏற்பட்ட பயிர் இழப்பிற்கு இப்போது இழப்பீடு வழங்கப்படுகிறது. எந்த காலத்திலும் இப்படி வழங்கப்படவில்லை. இந்த அரசுதான் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குகிறது. விவசாயிகள் நம்பிக்கையோடு இருக்கலாம். தமிழகத்தில் உள்ள அனைவருக்கும் கேட்டதெல்லாம் வழங்கக்கூடிய முதலமைச்சராக உள்ளார். மிகச் சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கடந்த 4 ஆண்டுகளாக பழைய பென்ஷன் திட்டம் நிறைவேற்றப்படாததால் வருகிற தேர்தலில் இப்பிரச்சினை எதிரொலிக்கும் என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், எந்த எதிரொலியும் வராது. காரணம் அவர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கின்றனர். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நம் முதல்வர் மீதும். ஆட்சி மீதும் நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்கள் ஏற்றுக் கொள்ள கூடிய ஓய்வூதிய திட்டத்தை முதலமைச்சர் விரைவில் அறிவிப்பார். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு என்றுமே தி.மு.க. பாதகமான முடிவை எடுக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.


# சீமான் குற்றவாளி என சுவரொட்டி ஒட்டப்பட்ட விவகாரம் தி.பெ.க. தலைவர் மீது நாம் தமிழர் கட்சி சார்பில் புகார்

சென்னை, மார்ச். 5

நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் இரா.ஐயனார் சென்னை மாநகர காவல் ஆணையரகத்தில் புகார் மனு அளித்துள்ளார். அதில்,

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை தவறாக சித்தரித்து, அவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது 'குற்றவாளி' என்றும் சென்னை,





சேலம், மதுரை உள்ளிட்ட நகரங்களில் 'சுவரொட்டி அடித்து ஒட்டிய' திராவிடர் பெரியார் கழக தலைவர் மா.பா.மணி அமுதன் மீது உரிய நடவடிக்கை விரைவாக எடுக்க வேண்டும் என்றும், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்ட வேண்டும் என்றும், தாங்கள் இந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்க தவறினால் காவல் துறையை கண்டித்தும் நாம் தமிழர் கட்சியின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திடுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருத்தணி ம.பொ.சி சாலையில் உள்ள காமராஜர் மார்க்கெட்டின் பெயரை மாற்றக்கூடாது ஜி.கே.வாசன் வலியுறுத்தல்



சென்னை, மார்ச். 5

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசு, பெருந்தலைவர் பெயருக்கும் புகழுக்கும் மேலும் பெருமை சேர்க்கும் விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பல ஆண்டுகளாக திருத்தணி நகராட்சி ம.பொ.சி சாலையில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் ஒரு காய்கறி மார்க்கெட் உள்ளது. இது பெருந்தலைவர் புகழுக்கு பெருமை சேர்க்கும் விதமாக உள்ளது. இப்போது இந்த மார்க்கெட் பராமரிக்கப்பட்டு திறப்பு விழா நடைபெறும் போது கலைஞர் நூற்றாண்டு மார்க்கெட் என பெயர் மாற்றம் செய்ய இருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இது தவிர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாக காமராஜர் காய்கறி மார்க்கெட் பெயர் மாற்றமில்லாமல் தொடரவும், ஏற்கனவே அகற்றப்பட்ட மகாத்மா காந்தி திருஉருவச் சிலையை காமராஜர் மார்க்கெட் அருகாமையிலேயே வைக்க வேண்டும் என்றும் வியாபாரிகளும், பொது மக்களும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# கோடை வெயிலை சமாளிக்க காவலர்களுக்கு AC ஹெல்மெட்

சென்னை, மார்ச். 5

சென்னையில் அதிகாலையில் காணப்பட்ட பனிமூட்டம் குறைந்து தற்போது வெயில் அடிக்க தொடங்கி உள்ளது. இனி வரும் நாட்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படும்.



இந்நிலையில் கோடை வெயிலை சமாளிக்கும் வகையில் ஆவடி காவல் ஆணையரக போக்குவரத்து காவலர்களுக்கு காவல் ஆணையர் சங்கர் ஏ.சி. ஹெல்மெட் வழங்கினார்.

வாகன தணிக்கை மற்றும் போக்குவரத்தை சீர் செய்யும் 50க்கும் மேற்பட்ட போக்குவரத்து காவலர்களுக்கு ஆவடி காவல் ஆணையர் சங்கர், கூடுதல் காவல் ஆணையர் பவானீஸ்வரி ஆகியோர் ஏ.சி. ஹெல்மெட் வழங்கினர். இதேபோல் காவலர்களுக்கு நாரால் செய்யப்பட்ட தொப்பியும், கண்ணாடியும் வழங்கப்பட்டன.

# அ.ம.மு.க. காற்றில் கரைந்து கொண்டிருக்கிறது டி.டி.வி.க்கு ஆர்.பி.உதயகுமார் பதிலடி

சென்னை, மார்ச். 5

சொந்த நலனுக்காக அ.தி.மு.க.வை பலவீனப்படுத்தி விட்டார் என பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் விமர்சித்த நிலையில் அவருக்கு முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பதில் அளித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது:





★ அ.ம.மு.க. காற்றில் கற்பூரம் கரைவதுபோல் கரைந்து கொண்டிருக்கிறது.

★ கட்சி தொடங்கிய போது இருந்தவர்கள் எல்லாம் நாள்தோறும் வெளியேறிக்கொண்டே இருக்கிறார்கள்.

★ அ.ம.மு.க. கப்பலில் ஓட்டை விழுந்து இருக்கிறது. அது எப்போது வேண்டுமானாலும் மூழ்கும் என்று தெரிந்துதான் நிர்வாகிகள் விலகுகின்றனர்.

★ டி.டி.வி.யிடம் இருந்து தப்பித்து பிழைத்தால் போதும் என்று அ.ம.மு.க. நிர்வாகிகள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

★ டி.டி.வி.தினகரன் 100 சதவீதம் விரக்தியில் பேசுகிறார்.

★ அ.ம.மு.க. தொண்டர் பெயர்களை வெளியிட்டால் அ.தி.மு.க. பலவீனமாக உள்ளதா? பலமாக உள்ளதா? என டி.டி.வி. புரிந்துகொள்வார்.

★ அ.தி.மு.க.வின் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. அது குறித்து டி.டி.வி. கவலைப்பட வேண்டாம் என்று கூறி உள்ளார்.

தினகனி



# நம்மை எதிர்க்கும் கட்சி அ.தி.மு.க.வாகத் தான் இருக்கும் அமைச்சர் துரைமுருகன்



சென்னை, மார்ச்5

சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது:

★ டெய்லி வரும் சின்ன சின்ன கட்சிகள் திருவிழாவில் வரும் வாணவேடிக்கை போல...

★ இது கட்சி. அது கூட்டம். உயிரைகொடுப்பது இது. தலைமுடியை கூட (சைகையில்) கொடுக்க மாட்டார்கள். அதனால் அவர்களை பற்றி எல்லாம் பேசுறதும் கிடையாது. பேச வேண்டிய அவசியமும் கிடையாது.

★ தேர்தல் வர வர எல்லா கட்சியும் கரைந்து போய்விடும்; நம்மை எதிர்க்கும் கட்சி அ.தி.மு.க.வாகத் தான் இருக்கும். அவர்களை எதிர்க்கும் சக்தி நம்மிடம் உண்டு. மீண்டும் தி.மு.க. தான் என்று கூறினார்.

# 5 நாட்களாக நடைபெற்று வந்த மீனவர்களின் போராட்டம் தற்காலிகமாக வாபஸ்



ராமேஸ்வரம், மார்ச். 5

இலங்கை கடற்படையினரால் கடந்த ஜனவரி முதல் 18 படகுகள் சிறைபிடிக்கப்பட்டு, 131 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், 38 மீனவர்கள் தண்டனை பெற்று, அங்குள்ள சிறைகளில் உள்ளனர். மேலும், தமிழகத்தைச் சேர்ந்த 42 மீனவர்கள், புதுச்சேரி மாநிலம் காரைக்காலைச் சேர்ந்த 13 மீனவர்கள் கோர்ட்டு காவலில் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும் 20க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டு கைதிகளாக உள்ளனர்.

இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களையும், படகுகளையும் நிபந்தனையின்றி விடுவிக்க வலியுறுத்தி ராமேசுவரம் மீனவர்கள் கடந்த மாதம் பிப். 24ம் தேதி முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். மேலும், கடந்த ஐந்து நாட்களாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் தங்கச்சிமடத்தில் கடந்த 5 நாட்களாக நடைபெற்று வந்த மீனவர்களின் போராட்டம் தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டுள்ளது. மேலும் வரும் மார்ச் 21ம் தேதி அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து ரெயில் மறியல் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே மீனவர்களின் 3 கோரிக்கைகளை நிறைவேற்றி தந்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

முன்னதாக போராட்டம் நடத்தி வரும் மீனவர்களை நேற்று மாலை தமிழக மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆகியோர் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் மீனவர்கள் மத்தியில் பேசுகையில், "உங்கள் கோரிக்கைகள் குறித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்துள்ளோம். உடனடியாக 3 கோரிக்கைகள் நிறைவேற்றி தரப்படும் என்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி அளித்துள்ளார். அதற்கான அறிவிப்பு விரைவில் வரும். அதில் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 87 விசைப்படகுகளுக்கான நிவாரண நிதியை உயர்த்தி கேட்டுள்ளனர். இதற்கான அறிவிப்பை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் விரைவில் அறிவிப்பார்.

அதேபோல் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்கள் மற்றும் படகுகள் மீதான வழக்கு விசாரணைக்கு வாதாட அரசு சார்பில் வக்கீல் ஒருவரை நியமித்து மீனவர்களை மீட்டுக்கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை கடற்படையால் கைது செய்து சிறையில் அடைக்கப்படும் மீனவரின் குடும்பத்துக்கு தமிழக அரசால் நாள்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை ரூ.350ல் இருந்து உயர்த்தி வழங்கப்படும் அதற்கான அறிவிப்பையும் முதல்அமைச்சர் அறிவிக்க உள்ளார்.

மற்ற கோரிக்கைகள் அனைத்தும் மத்திய அரசு மூலம் மட்டுமே செய்ய முடியும். இதுகுறித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து மத்திய அரசுக்கும், வெளியுறவுத்துறைக்கும் அழுத்தம் கொடுத்து அந்த கோரிக்கைகளையும் நிறைவேற்றி தர நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்திருந்தனர்.

# தென் மாவட்டங்களில் இருந்து வரும் பேருந்துகள் கிளாம்பாக்கம் வரை இயக்கம் புதிய நடைமுறை அமல்




சென்னை, மார்ச்.5

சென்னையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக கிளாம்பாக்கத்தில் புதிய பஸ் நிலையம் திறக்கப்பட்டது. இதையடுத்து கோயம்பேட்டில் இருந்து தென் மாவட்டங்களுக்கு இயக்கப்பட்ட பஸ்கள் தற்போது கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகின்றன.

கிளாம்பாக்கம் பஸ் நிலையம்பயன்பாட்டுக்கு வந்தபோதும், தாம்பரம் வரை பஸ்கள் இயக்கப்படுவதால் நெரிசலை கட்டுப்படுத்துவது சவாலாக இருந்து வருகிறது.

இதனை தொடர்ந்து தாம்பரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தாம்பரம் மாநகர போக்குவரத்துக் காவல் துறை வழங்கியுள்ள பரிந்துரையின்படி தமிழகத்தின் தென்மாவட்டங்களிலிருந்து செங்கல்பட்டு, திண்டிவனம் வழியாக தாம்பரம் வரை இயக்கப்பட்டு வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் அனைத்தும் முதல் சென்னை கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரை இயக்கப்படும் என்று போக்குவரத்து கழகம் அறிவித்து உள்ளது.

எனவே கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலுருந்து சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் பயணிகளின் நலன் கருதி மா.போ. கழகத்தில் தற்போது 80 வழித்தடங்களில் 589 பேருந்துகள் 3795 பயணநடைகள் இயக்கப்பட்டு வருவதுடன் கூடுதலாக 104 பேருந்துகள் 816 பயணநடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 'கருத்து கந்தசாமி' எங்கள் கட்சிக்கு சான்றிதழ் வழங்க வேண்டியதில்லை சண்முகம்



சென்னை, மார்ச்.5

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது, பாலியல் வழக்கு குறித்து பேச தகுதியற்றவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினர். காம்ரேட்டில் இருந்து கார்ப்பரேட்டாக மாறி உள்ளனர். பாலியல் குற்றவாளி என நீதிமன்றம் கூறாத நிலையில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம் என்னை எப்படி பாலியல் குற்றவாளி என கூறுகிறார்?. கம்யூனிஸ்டு கட்சியில் செயல்படாத தலைவர்கள் உள்ளனர்.

அண்ணா பல்கலைக்கழக பாலியல் சம்பவம், பொள்ளாச்சி சம்பவம் உள்ளிட்ட 26க்கும் மேற்பட்ட பாலியல் சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் அதை பற்றி கம்யூனிஸ்டு கட்சியினர் வாய் திறக்கவில்லை என்று கூறி இருந்தார்.

இந்நிலையில் சீமான் கூறியதற்கு பதில் அளித்து மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகம் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது:

'நுணலும் தன் வாயால் கெடும்' என்று சொல்வார்கள் சீமான் தன்னுடைய வாயாலே தன்னை கெடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதற்கு அவரது ஏராளமான ஊடக பேட்டிகள், மேடை பேச்சுகள் ஒரு உதாரணம்.

பிரச்சனைகளை பட்டியலிட்டு இதில் எல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் என்ன செய்தார்கள் என்று அவர் கேள்வி கேட்டு இருக்கிறார்.

அவர் பட்டியலிட்ட எல்லா பிரச்சனைகளிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி களப் போராட்டத்தில் நின்று, பலவற்றில் வெற்றி பெற்றுள்ளோம் என்பதை நெஞ்சை நிமிர்த்தி என்னால் சொல்ல முடியும்.

இந்த போராட்டம் நடைபெற்ற காலம் முழுவதும் சீமான் கருத்து கந்தசாமியாகவும், வாயால் வடை சுடுகிற வேலையை மட்டுமே செய்து கொண்டிருந்தார். அவர் களப் போராட்டத்திற்கு என்றுமே வந்ததில்லை என்பதை சம்பந்தப்பட்ட பிரச்சனையால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் அறிவார்கள்.

அதனால் கம்யூனிஸ்டுகள் போராடுகிறார்களா என்ற சான்றிதழ்களை சீமான் போன்றவர்கள் வழங்க வேண்டியதில்லை. கம்யூனிஸ்டுகள் என்றாலே அவர்கள் போராட்டக்காரர்கள் என்று தான் உலகம் முழுவதும் இருக்கக்கூடிய இந்திய மக்கள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

ஆகவே சீமானிடம் இருந்து கம்யூனிஸ்டுகளுக்கான சான்றிதழை பெற வேண்டிய நிலையில் நாங்கள் இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன் என்று கூறி உள்ளார்.

# 131வது படத்தின் படப்பிடிப்பில் இணைந்த சிவராஜ்குமார்



கன்னட சினிமாவின் முன்னணி நடிகர் சிவராஜ் குமார். தமிழில் ரஜினியின் ஜெயிலர், தனுஷின் கேப்டன் மில்லர் போன்ற படங்களில் நடித்தார். புற்று நோயால் பாதிக்கப்பட்ட இவர் கடந்த ஆண்டு சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று சில மாதங்களுக்கு பிறகு நாடு திரும்பினார். அதையடுத்து மீண்டும் திரைப்படங்களில் நடிப்பதற்காக தன்னை தயார்படுத்திக் கொண்டு வருகிறார். குறிப்பாக, கேம் சேஞ்சர் படத்தை அடுத்து ராம்சரண் நடிக்கும் 16 வது படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நேரடி தமிழ்ப் படமொன்றில் நாயகனாக நடிக்க பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது.

இந்த நிலையில், புற்றுநோய் பாதிப்பிலிருந்து மீண்டதைத் தொடர்ந்து தன் 131வது படத்தின் படப்பிடிப்பில் சிவராஜ்குமார் இணைந்துள்ளார். பெங்களூருவில் துவங்கிய இப்படப்பிடிப்பில் அவருக்கு ரசிகர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்தனர்

வரும் 5ம் தேதி ராம்சரணின் 16 வது படத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தனது முந்தைய சாதனையை முறியடித்த அஜித்!



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார் கார் பந்தயத்தில் ஆர்வம் காட்டி வருகிறார். கடந்த மாதம் துபாயில் நடந்த 24 மணி நேர கார் பந்தயத்தில் அவருடைய அணி பங்கேற்றது. பந்தயத்துக்கு முன்பாக நடந்த பயிற்சியில் அஜித்குமார் ஓட்டிய கார் விபத்துக்குள்ளானது. இதையடுத்து போட்டியில் இருந்து அவர் விலகினாலும் அவருடைய அணி பங்கேற்று 3ம் இடத்தை தட்டிச் சென்றது. இவரது வெற்றிக்கு ரசிகர்கள் மற்றும் திரைத்துறையை சேர்ந்த பலரும் வாழ்த்து தெரிவித்திருந்தனர். இந்நிலையில் ஸ்பெயினில் நடைபெற்ற கார் பந்தயத்தில் மணிக்கு 270 கி.மீ வேகத்தில் காரை இயக்கி 1.47 நிமிடங்களில் இலக்கை எட்டி, தனது முந்தைய சாதனையை முடியடித்துள்ளார் அஜித் குமார். இதற்கு முன்பாக 240 கி.மீ வேகத்தில் காரை இயக்கி 1.51 நிமிடங்களில் இலக்கை எட்டியிருந்தார்.

# இளையராஜாவை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்த திருமாவளவன்!

1976ம் ஆண்டு தேவராஜ்மோகன் இயக்கத்தில் வெளியான அன்னக்கிளி படத்தின் மூலம் அறிமுகமானவர் இசைஞானி இளையராஜா. இவர் தனது வரலாற்றில் இதுவரை 1,000க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

சமீபத்தில் இவரது இசையில் வெளியான ''விடுதலை 2' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இவர் தற்போது 'வேலியன்ட்' (Valiant) என்னும் தலைப்பில் தனது முதல் சிம்பொனியை இயற்றியிருக்கிறார். இது வருகிற 8ம் தேதி லண்டனில் உள்ள அப்பல்லோ அரங்கத்தில் நேரடி நிகழ்ச்சியாக அரங்கேற்றப்பட உள்ளது.

இதற்கு பல்வேறு தரப்பிலிருந்தும் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், கமல்ஹாசன் ஆகியோர் இளையராஜாவை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் இளையராஜாவின் அலுவலகத்திற்கு நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# மூக்குத்தி அம்மன் 2 படத்தின் பூஜை அப்டேட்



2020ம் ஆண்டு ஆர்.ஜே பாலாஜி இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் வெளிவந்த 'மூக்குத்தி அம்மன்' படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் மூலம் இயக்குநராகத் தமிழ் சினிமாவில் ஆர்.ஜே பாலாஜி அறிமுகமானார். படத்தின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாம் பாகத்தை எடுக்கப்போவதாக சில மாதங்களுக்கு முன் படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருந்தனர். இப்படத்தில் நயன்தாரா மீண்டும் மூக்குத்தி அம்மனாக நடிக்கவுள்ளார். இத்திரைப்படத்தை பிரபல இயக்குனர் சுந்தர்சி இயக்கவுள்ளார். படத்தை வேல்ஸ் இண்டர்நேஷனல் மற்றும் ரவுடி பிக்சர்ஸ் நிறுவனம் இணைந்து தயாரிக்கவுள்ளனர். படத்தின் தொடக்க பூஜை விழாவை பெரியளவில் நடத்த திட்டமிட்டுள்ளனர். வரும் மார்ச் 6ம் தேதி பூஜை விழா சென்னையில் நடைப்பெற இருக்கிறது. திரைப்படம் 100 கோடி ரூபாய் பட்ஜெட்டில் தயாராகவுள்ளது. படத்தின் செட் அமைக்கும் பணிகளும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சுந்தர் சி இயக்கத்தில் அண்மையில் வெளியான மத கஜ ராஜா திரைப்படம் மாபெரும் வரவேற்பை பெற்றது. அதைத் தொடர்ந்து வடிவேலு நடிப்பில் கேங்கர்ஸ் திரைப்படம் வெளிவர இருக்கிறது. 'மூக்குத்தி அம்மன் 2' பட பூஜை வரும் 6ம் தேதி தொடங்கவுள்ள நிலையில், தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். மேலும் 'மூக்குத்தி அம்மன் 2' படத்தின் பூஜை தேதி அறிவிப்பு வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# சாம்பியன்ஸ் டிராபி: எதிரணி எதுவாக இருந்தாலும் இந்தியா வீழ்த்தும் கங்குலி நம்பிக்கை



ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதன் லீக் சுற்று முடிவில் 'ஏ' பிரிவில் டாப்2 இடங்களை பிடித்த இந்தியா, நியூசிலாந்து, 'பி' பிரிவில் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெற்றன. இதில் துபாயில் இன்று அரங்கேறும் முதலாவது அரைஇறுதியில் முன்னாள் சாம்பியன்களான இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

கடந்த ஒருநாள் உலகக்கோப்பை இறுதிப்போட்டிக்கு பின் இந்தியா ஆஸ்திரேலியா மோதும் முதல் 50 ஓவர் போட்டி இதுவாகும். இதனால் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி பழி தீர்க்க வேண்டும் என்பது இந்திய ரசிகர்களின் விருப்பமாக உள்ளது. இத்தகைய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இந்த போட்டி நடைபெற உள்ளது.

இந்நிலையில் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் (டி20 மற்றும் ஒருநாள்) ஆழமான திறமை கொண்டிருப்பதால் இந்திய அணி எந்த எதிரணியையும் வீழ்த்தி கோப்பையை வெல்லுமென இந்திய முன்னாள் வீரர் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "இந்தியா 2024 டி20 உலகக்கோப்பையை வென்றது. மேலும் கடந்த ஒருநாள் உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் விளையாடியது. வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் எதிரணி யாராக இருந்தாலும் இந்தியா மிகவும் வலுவானது. யாரை வேண்டுமானாலும் வீழ்த்தும் திறமை இந்தியாவிடம் இருக்கிறது" என்று கூறினார்.

# சாம்பியன்ஸ் டிராபி: இந்திய அணி இறுதிப்போட்டிக்கு செல்லாது ஆஸி.முன்னாள் வீரர்



9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடர் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடந்து வருகிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் துபாயில் நடந்து வருகிறது. மற்ற லீக் ஆட்டங்கள் பாகிஸ்தானில் உள்ள லாகூர், கராச்சி, ராவல்பிண்டி ஆகிய நகரங்களில் நடைபெற்றது.

8 அணிகள் பங்கேற்ற இந்த தொடரில் லீக் சுற்று முடிவில் 'ஏ' பிரிவில் டாப்2 இடங்களை பிடித்த இந்தியா, நியூசிலாந்து, 'பி' பிரிவில் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெற்றன. இதில் துபாயில் இன்று அரங்கேறும் முதலாவது அரைஇறுதியில் முன்னாள் சாம்பியன்களான இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

சமீப காலமாக இந்திய அணிக்கு ஆஸ்திரேலியா கடும் சவால் அளித்து வருகிறது. குறிப்பாக கடந்த ஒருநாள் உலகக்கோப்பை மற்றும் பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் ஆகிய தொடர்களில் இந்திய அணியை வீழ்த்திய ஆஸ்திரேலியா இம்முறையும் பெரிய சவாலை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இந்திய அணியை இறுதிப்போட்டிக்கு ஆஸ்திரேலியா செல்ல விடாது என்று அந்நாட்டின் முன்னாள் வீரர் பிராட் ஹாடின் தெரிவித்துள்ளார். ஏனெனில் இந்திய அணி மீது அதிகப்படியான அழுத்தம் இருப்பதாக அவர் கூறியுள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "இந்தியா தங்களது அனைத்து போட்டிகளையும் ஒரே மைதானத்தில் விளையாடி தனித்துவமான நிலையில் இருக்கிறது. துபாய் பிட்ச் காய்ந்திருக்கும் நிலையில் ஸ்கொயர் பகுதிகளில் புற்கள் இல்லை. அது இந்தியாவுக்கு பொருந்தும். ஆனாலும் அவர்கள் மீது அனைத்து அழுத்தம் இருக்கும் என்றுநினைக்கிறேன். ஆஸ்திரேலியா தங்களுக்குத்தாங்களே பெருமையுடன் விளையாடி அரைஇறுதிக்கு வந்துள்ளார்கள்.

இது அவர்களுக்கு மற்றும் ஒரு சாதாரண போட்டி. எனவே ஆஸ்திரேலியர்கள் மீது எந்த அழுத்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தியா அழுத்தத்தை தங்களது சொந்த வழியில் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களை தோற்கடித்தால் அது அப்செட்டாக இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த சூழ்நிலைகளில் இந்திய அணியை ஆஸ்திரேலியா தோற்கடிப்பதை நான் பார்ப்பேன்.

உண்மையில் கம்பீர் பயிற்சியாளராக வந்தது முதல் இந்தியா மீது அதிகப்படியான அழுத்தம் இருக்கிறது. ஏனெனில் அவர் வந்ததிலிருந்து கடந்த 6 மாதங்களில் அவர்கள் பெரிய வெற்றிகளைப் பெறவில்லை. எனவே இத்தொடரில் எப்படியாவது இறுதிப்போட்டி செல்ல வேண்டும் என்று அழுத்தம் அவர்கள் மீது இருக்கிறது. ஆனால் அவர்கள் இறுதிப்போட்டி செல்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. தோல்வியை சந்தித்த பின் அவர்களிடம் பெரிய ரியாக்சன் இருக்கலாம்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.